**ONE TWO ACADEMY**

**10 - ஆம் வகுப்பு**

**தமிழ்**

**இயல் - 3**

**மதிப்பெண்கள்:-50** **கால அளவு: 1.30 மணி நேரம்**

**I சரியான விடையினைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.** **10 x 1 = 10**

**1.** விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை.

அ) நிலத்திற்கேற்ற விருந்து ஆ) இன்மையிலும் விருந்து

இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

**2.** தொல்காப்பியர் விருந்து என்பதை என்னவென்று கூறியுள்ளார்?

அ) தொன்மை ஆ) புதுமை

இ) இளமை ஈ) முதுமை

**3.** காசிக்காண்டத்தை இயற்றியவர் யார்?

அ) துளசிதாசர் ஆ) அதிவீரராம பாண்டியர்

இ) ஔவையார் ஈ) பெருஞ்சித்திரனார்

**4.** விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கத்தின் பண்புகள் எத்தனை?

அ) எட்டு ஆ) ஒன்பது

இ) ஆறு ஈ) பத்து

**5.** “சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி” என்னும் அடியில் பாக்கம் என்பது

அ) புத்தூர் ஆ) மூதூர்

இ) பேரூர் ஈ) சிற்றூர்

**6.** மலைபடுகடாம் எந்த நூல்களுள் ஒன்று?

அ) எட்டுத்தொகை ஆ) பத்துப்பாட்டு

இ) நீதி ஈ) பதினெண்கீழ்க்கணக்கு

7. எழுத்துலகில் கி.ரா. என்றழைக்கப்படுபவர்........................

அ) கி. ராஜமாணிக்கம் ஆ) கி. ராஜநாராயணன்

இ) கி. ராசரத்தினம் ஈ) கி. ராசதுரை

8. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது...............................

அ) வேற்றுமை உருபு ஆ) எழுவாய்

இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

9. தொகாநிலைத் தொடரின் வகைகள்...............................

அ) 6 ஆ) 7

இ) 8 ஈ) 9

10. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது?

அ) கூவிளம் தேமா மலர் ஆ) கூவிளம் புளிமா நாள்

இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

II எவையேனும் எட்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் **8 X 2 = 16**

11. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.

12. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்' - தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

13. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத் தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?

14. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?.

15. 'நச்சப் படாதவன்' செல்வம் - இத்தொடரில் வண்ணமிட்ட சொல்லுக்குப் பொருள் தருக.

**16. பழமொழிகளை நிறைவு செய்க.**

அ) உப்பில்லாப் .............................. ஆ) ஒரு பானைச் ..............................

**17.இரு சொற்களையும் ஒரே தொடரில் அமைத்து எழுதுக.**

அ) சிலை - சீலை, ஆ) தொடு - தோடு

**18.அகராதியில் காண்க.**

அ) ஊண், ஊன் ஆ) திணை, தினை

**19.கீழ்க்காணும் பத்தியில் உள்ள தொடர் வகைகளை எடுத்து எழுதுக.**

மாடியிலிருந்து இறங்கினார் முகமது. அவர் பாடகர். பாடல்களைப் பாடுவதும் கேட்பதும் அவருக்குப் பொழுதுபோக்கு.

**20.கலைச்சொல் அறிவோம்:**

அ) Devotional literature – ஆ) Modern literature –

**III எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடை அளிக்கவும் 2 X 4 = 8**

21.வேலொடு நின்றான் இடுஎன்றது போலும்
கோலொடு நின்றான் இரவு - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.

22.கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

23.‘கண்ணே கண்ணுறங்கு!

காலையில் நீயெழும்பு

மாமழை பெய்கையிலே

மாம்பூவே கண்ணுறங்கு!

பாடினேன் தாலாட்டு

ஆடி ஆடி ஓய்ந்துறங்கு!

இத்தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.

**IV எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும். 1 X 8 = 8**

24.ஆற்றுப்படுத்துதல் என்பது அன்றைக்குப் புலவர்களையும் கலைஞர்களையும் வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.

25.அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

**V <u>எவையேனும் ஒரு வினாவிற்கு விடை அளிக்கவும்.</u> 1 X 8 = 8**

26.உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

27.உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக..